[7th November 1966

* 404 Q.—Sri M. D. THIAGARAJA PILLAI : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether it is a fact that the crops in Thanjavur district, including recently transplanted paddy seedlings have withered due to drought conditions and water not reaching a number of places; and

(b) if so, whether there is any proposal under consideration to grant land revenue remission in relaxation of the existing Standing Orders on the subject?

The Hon. Sri V. RAMAIAH : (a) & (b) : A statement * is placed on the Table of the House.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தலைவர் அவர்களே, இப்போது மறுபடியும் மழை ஜாஸ்தியாக ஏற்பட்டு, அதனால் ஏற்பட்டிருக்கிற நஷ்டத்தை கவனித்து தக்க நிவாரணம் அளிக்க வேண்டிய வழி வகைகளைச் செய்ய அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இது புது கோரிக்கை.

Rise in prices in hotels

* 405 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether the attention of the Government has been drawn to the sudden rise in prices of edibles in hotels in Madras by about 25 per cent to 50 per cent; and

(b) if so, the action proposed by the Government to check the same?

The Hon. Sri V. RAMAIAH : (a) There has been some increase in prices of edibles in some of the city hotels.

(b) The Government are closely watching the situation and are considering what best steps could be taken to keep the prices of edibles in hotels at a reasonable level.

திரு. சா. கணேசன் : ஓட்டல்களிலே உணவுப் பண்டங்களின் விலை ஏறியிருப்பது பிரத்தியட்சமான நிலைமை. அதற்குச் சொல்லுகிற காரணம் பண்டங்களின் விலை அதிகமாக ஏறியிருக்கிறது, அதனால்தான் விலையைக் கூட்டவேண்டியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இந்த நிலையிலே நியாயமான விலையில் தாராளமாகப் பொருள்கள் ஓட்டல்களுக்கு கிடைக்க வழிவகை செய்யப்படுகிறதா? அப்படிச் செய்யப்பட்டிருந்தால் விலையைக் கூட்டி விற்பது தவறு என்று அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா : நான் முக்கிய கேள்விக்கு பதில் சொல்லக்கூடிய முறையில் சொன்னேன். எந்தெந்தப் பண்டங்களுக்குக் கன்ட்ரோல் கொண்டுவந்திருக்கிறோமோ அந்தப் பொரு

* Printed as appendix IV on pages 546–548

7th November 1966]

லைக் கொடுக்கிறோம். அப்படிக் கொடுத்தால் பிரச்னை தீர்ந்துவிடும் என்று நினைக்கிறோம். ஆனால் மற்றப் பொருள்களின் விலை உயர்ந்து விடுகிறது. அந்தப் பொருள்களுக்கும் கன்ட்ரோல் கொண்டு வருகிறோம் உதாரணமாக, பருப்பு வகையை எடுத்துக்கொண்டால், அதன் விலை ஏறியதால் ராஜஸ்தான் மத்திய பிரதேசத்திலிருந்து வாங்கிக் கொடுத்தோம். அந்த நிலவரத்திலே எண்ணெய் விலை அதிகமாகப் போய்விட்டது. அப்படித் தொடர்ந்து ஒன்றுக்கொன்று பல சிக்கல்களாக இருப்பதனால் நாம் நியாயமாக எதைச் செய்யவேண்டுமோ, அதைச் செய்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் உணவு அமைச்சர் அவர்கள் சமீபத்திலே சென்னையிலே எந்த ஹோட்டலிலேனும் சாப்பாடு வரவழைத்து சாப்பிட்டுப் பார்த்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வே. ராமையா : நான் சாப்பிட்டுப் பார்த்துத் தான் விஷயம் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவசியம் இல்லை. இதைப்பற்றி தொடர்ந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். தக்க அதிகாரிகளை வைத்துக்கொண்டு, இருக்கக்கூடிய புள்ளி விவரங்கள். கனம் அங்கத்தினர்கள் சொல்லக்கூடிய விவரங்கள் இவைகளையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு ஆராய்ந்து அவ்வப்பொழுது நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கேள்வியிலே 25 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதம் வரைக்கும் விலை ஏற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்று கேட்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத் தரப்பில் விலை ஏறி இருப்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையிலே பல துறைகளில் விலை ஏறி இருந்தாலும், உணவுப் பொருட்களைப் பொறுத்த மட்டில் எத்தகைய விகிதாசாரத்திற்கு விலை ஏற்றம் அனுமதிக்கக்கூடியது, அதைவிட 'அப்நார்மலாக' எவ்வளவு ஏறி இருக்கிறது என்பது பற்றி அரசாங்கம் தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. வெ. ராமையா : விலை ஏற்றத்தைப் பொறுத்த வரையில் அனுமதிக்கக்கூடியது, அதைவிட விலை ஏற்றம் 'அப்நார்மல்' என்பது பற்றி என்னிடம் விவரம் இல்லை. அம்மாதிரி விவரம் சொல்வதற்கும் சாத்தியமாக இருக்காது என்று நினைக்கிறேன்.

திரு. து. ப. அழகமுத்து : ஹோட்டல்களில் விலை ஏறியிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி ஏறாமல் தடுப்பதற்கு ஹோட்டல்கள் முதலாளிகளை அழைத்து அரசாங்கம் ஏதாவது பேச்சு வார்த்தை நடத்தியதா ? அப்படியென்றால் அப்பொழுது என்ன கருத்து தெரிவிக்கப்பட்டது ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் முதல் அமைச்சர் அவர்கள் பல தடவை ஹோட்டல்கள் முதலாளிகளை அழைத்து பேசியிருக்கிறார்கள். கூடுமானவரையில் அவர்கள் ஒத்துழைப்பு கொடுப்பதற்கு முன்வந்திருக்கிறார்கள். இருந்தபோதிலும், அவர்கள்

சொல்லக்கூடிய முக்கியமான காரணம், நான் ஆரம்பத்தில் சொன்ன மாதிரி, பல பொருள்களின் விலைவாசி அடிக்கடி ஏறிக் கொண்டிருப்பது தான். அவர்களுக்கு பொருள்கள் நியாயமான விலைக்கு கிடைப்பதற்கு என்னென்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமோ அம்மாதிரி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. கரு. சீமைச்சாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது அரிசிக்கு கன்ட்ரோல் இருக்கிறது. மற்றபடி பருப்பு, எண்ணெய் போன்ற பொருள்களின் விலைவாசி ஏறிக்கொண் டிருப்பதுதான் விலை ஏற்றத்திற்குக் காரணம் என்று சொன்னார்கள். அரிசிக்கு மாத்திரம் கண்ட்ரோல் வைத்துவிட்டு, மற்ற பொருள்களுக்கு கண்ட்ரோல் இல்லாமல் இருப்பதற்கு என்ன காரணம் ?

கனம் திரு. வெ. ராமையா : அரிசிக்கு மட்டும் கண்ட்ரோல் என்பது இல்லை. அத்தியாவசியமான பண்டங்களையெல்லாம் நியாயமான விலைக்கு வாங்கிக்கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்கிறது. இராஜஸ்தான் போன்ற இடங்களிலிருந்து பருப்பு வகைகள் வாங்கிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. திடீரென்று எண்ணெய் விலை ஏறியது. அதைச் சரிப் படுத்துவதற்கு நாம் ஏராளமாக வேர்கடலையை வாங்கி எண்ணெயாக ஆக்குவதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக் கிறோம்.

திரு. கோ. சி. மணி : ஹோட்டல்களுக்கு அரசாங்கம் நிர்ணய விலையில் சில பண்டங்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட பண்டங்களிலிருந்து உருவாக்கப்பட்ட பொருள் களை மாத்திரமாவது நிர்ணய விலைக்கு விநியோகம் செய்ய வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. வெ. ராமையா : நாம் கொடுக்கக்கூடிய ஒன்றிரண்டு பண்டங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு பொருள்களை உற்பத்தி செய்துவிட முடியாது. மற்றப் பண்டங்களும் அதற்கு தேவைப் படுகிறது.

திரு. சோ. ஆறுமுகம் : ஹோட்டல்களில் உணவுப் பொருள் களின் விலை ஏற்றப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். விலை ஏறிக்கொண்டிருக்கிற அதே நேரத்தில், இட்லி, வடை போன்ற பொருள்களை சிறியதாக்கிக் கொடுக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : இதுபற்றி தொடர்ந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். எங்கெங்கே எப்பொழுது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அதை எடுத்துக் கொண்டு வருகிறோம் நான் கேள்விகளுக்கு பதில் சொல்லும் பொழுது, கேள்விகளுக்கு நான் சமாதானம் சொல்வதற்கு முயற்சிப்பதாக கனம் அங்கத்தினர்கள் நினைத்துவிடக்கூடாது. அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் ஹோட்டல் முதலாளிகளை கூப்பிட்டுப் பேசியதாகச் சொன்னார்கள். அசெம்பிளி மெம்பர்களுக்காக நடத்தப்படுகிற காண்டீன் முதலாளியைக் கூப்பிட்டு அமைச்சர் அவர்கள் ஏதாவது விலை ஏற்றத்தைப்பற்றி கேட்டார்களா ? ரூபாய் 1.25 ஆக இருந்த சாப்பாடு ரூ. 1.75-ஆக ஆக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி ஏதாவது பரிசிலனை செய்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : எனக்கு இதைப்பற்றி ஞாபகம் இல்லை. ஹோட்டல்கள் சம்பந்தப்பட்டவர்கள், அதாவது ஹோட்டல் முதலாளிகள் அசோசியேஷன் பிரதிநிதிகளைக் கூப்பிட்டுப் பேசினார்கள். ஒவ்வொரு ஹோட்டல் முதலாளியையும் கூப்பிடுவது என்பது இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் உணவு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பரிசிலனை செய்துகொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். விலை தொடர்ந்து ஏறிக்கொண்டிருக்கிறது, தரமும் தொடர்ந்து குறைந்து கொண்டிருக்கிறது. மற்ற இடங்களுக்கு ரகசியமாக, மாறு வேடத்தில் போய் பார்ப்பதாக மந்திரிகள் சொல்லுகிறார்கள். அப்படி மாறுவேடத்தில் போய் ஹோட்டல்களில் என்ன நடக்கிறது என்று பார்த்து, விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ? ஹோட்டல்கள் முதலாளிகள் சங்கப் பிரதிநிதிகளைக் கூப்பிட்டுப் பேசியபொழுது விலையை எப்படி தந்திரமாக உயர்த்துவது என்பது பற்றி முதல் அமைச்சர் அவர்கள் ஆலோசனை கூறினார்களா ? கனம் முதல் அமைச்சர் அவர்கள் விலையைக் குறைப்பதற்கு யோசனை கூறியதாகத் தெரியவில்லை. முதலாளிகளிடமிருந்து நியாயமான விலைக்கு பொருள்கள் வழங்கப்படவேண்டும் என்று ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா ? அப்படியானால் அந்தக் கோரிக்கையின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : பொதுவாக பல பண்டங்களின் விலைவாசி ஏற்றத்தைப்பற்றி அவர்கள் சொன்னார்கள். பருப்பு, எண்ணெய் போன்ற பண்டங்கள் நியாயமான விலைக்குக் கிடைக்க வேண்டுமென்பதற்காகத் தான் முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். முதல் அமைச்சர் அவர்கள் தந்திரமாக விலை ஏற்றத்திற்கு ஆலோசனை கூறவில்லை. விலையைக் குறைப்பதற்கு வேண்டிய ஆலோசனையைத் தான் சொல்லியிருக்கிறார்கள்.

இனாம் எஸ்டேட்டுகள் ஒழிப்புச் சட்டம்

*** 406 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் வருடத்து மைனர் இனாம் சட்டத்தின் மூலம் தங்களுக்கு பாதகம் ஏற்பட்டிருப்பதாக தமிழ் நாட்டிலுள்ள தேவாலயங்களின் ஊழியர்கள் முறையீடு 1964, 1965, 1966-ம் வருடங்களில் சர்க்காருக்கு வந்துள்ளதா ?